# தேனருவி

## தமிழன் பாட்டு

தமிழுக் காக—என்
தாயினுக் காக

அமையாரின் படையைஎன் சினத்தால் எரிப்பேன்
அவராலே நான்சாக நேரினும் சிரிப்பேன் (தமிழுக்காக!)

தமிழுக்கு மகன் நான்!—ஒரு
தாழ்வையும் அறியேன்.

தமைஉயர்வென் பார் அவர் பகைப்பெருகி கடலைத்
தாக்கிடுவேன் அல்லது இழப்பேன் என்உடலை (தமிழுக்காக!)

அஞ்சுதல் இல்லேன்—நான்
ஆரியன் அல்லேன்.

நெஞ்சம் தமிழ் மரபின் வீரத் தொகுப்பு
நேர்போரில் காண்பேன் சிறப்பல்லது இறப்பு. (தமிழுக்காக!)

பைந்தமிழ் எல்லை—தனில்
பகைக்கிட மில்லை

எந்நாளும் தோலாத செந்தமிழன் தோள்
எழுந்தால்தான் தூள் அல்லது தமிழ்தாய் ஆள்வாள்.

## காதல் கரும்பு

கரும்புக்குள் இருப்பது இனிமை!-என்
காதல் கரும்பை விட்டிருப்பேனோ தனிமை?

திருவிதழ் கூட்டுக்குள் சர்க்கரை - அவள்
திருட்டு விழிக் கென்மேல் அக்கறை!

மாலையின் மணிகளை நூலே தாங்கும் - இரு
மனங்களின் சுமைகளைக் காதலே தாங்கும்.
சோலை மலர்கள்எல்லாம் அவள்எழில் ஓங்கும்
சோர்ந்து சோர்ந்துஎன் விழிகளோ ஏங்கும்.

ஆறுதன் வழியினை அறிந்திடல் போலே - அன்
பாறுதான் என்மேல் வழிந்ததினாலே
பேறுபெற்றேன் நான் தமிழச்சியாலே - எனப்
பேசும் உலகுதன் வியன்மொழியாலே.

மக்கள் பெறாதவர் மகிழ்வினை அறியார்,
மாதினைப் பெறாதவர் வாழ்வினைத் தெரியார்,
சிக்கலைத் தீர்ப்பதும் அவளின் கடமை - அவள்
சேர்ந்துவிட்டால் வேண்டேன் பிறஉடைமை!

## கருத்தடை மருத்துவ மனையில் ஒருத்தியின் வேண்டுகோள்!

இருக்கும் பிள்ளைகள் எனக்குப் போதும் அம்மா - என்
கருக்கதவை மூடிவிடுங்கள் அம்மா, அம்மா!
(இருக்கும் பிள்ளைகள்)

பெருத்தவரு மானம் எனக்கில்லை - இனிப்
பிள்ளைபெறும் வலிவும் உடம்பில் இல்லை.
வருத்தில் ஏதும் மீதம் ஆவதும் இல்லை - அடகு
வைத்து வாங்க மூக்குத் திருகும் இல்லை
(இருக்கும் பிள்ளைகள்)

மக்கள் தொகைபெருக்கத்தால் வரும் பஞ்சம் - இங்கு
வரும் பஞ்சத்தால் ஒழுக்கக் கேடே மிஞ்சும்
தக்கோர் இவ்வாறு சொன்னார்(என்) நெஞ்சும்
தாங்குவதோ அருள் புரிவீர் கொஞ்சம்.
(இருக்கும் பிள்ளைகள்)

தாய்மொழிமேல் அன்பிராது நாட்டில்
தன்னலமாம் அவரவர் கோட்பாட்டில்
தூய்மையே இராது நெஞ்சு வீட்டில்
தொகைப் பெருக்கம் ஏன் இந்தக் கேட்டில்?
(இருக்கும் பிள்ளைகள்)

தோன்றியுள்ள மக்கள்நலம் யாவும் - இங்குத்
தோன்றாத மக்கள் தந்த தாகும்!
தோன்றாமை இன்பம் என்று சொன்னார் - மிகத்
துயரான புத்தர் ஐயாவும். (இருக்கும் பிள்ளைகள்)

## மாறாத தலைவர்

குறிஞ்சித் திணை

[தலைவி — தோழிக்குக் கூறியது]

சொன்னசொல் மாறாத தலைவர்—அவர்
தொலையாத நிலையன்புக் கினியர்! தோழீ
தோளினைப் பிரியாத துணைவர்!—அவர்
தூய்மையும் வாய்மையும் வாய்ந்தநல் கணவர்.
(சொன்னசொல்)

இன்சுவைத் தாமரை தேனுண்ட தேனீ
இனம்கூடி சந்தன மரத்தின் வானீள்
நன்கிளை தாங்கிய தேனடைத் தேன்போல்
நல்லவர் நட்பென்றும் ஊன்றிடும் ஆல்போல்,
(சொன்னசொல்)

உலகிற்கு நீர்முதல் ஆவது போலே
உறவுக்கு அவரின்றி அமையாது வாழ்வே,
விலகவே பொறாதவர் பிரிவதும் ஏது?
வீணையை விரல் பிரிந்தால் இசை பிறக்காது!
(சொன்னசொல்)

என்நெற்றிப் பசலைக்கு என்றுமே அஞ்சுவார்,
இன்னல்தரார், எனையே இன்பத்தில் கொஞ்சுவார்;
அன்பன்றி வேறொன்றும் உண்மையில் அறியார்.
அவர் பிரிந்தார் என்றால் வேறெவர் மிஞ்சுவார்?
(சொன்னசொல்)

## அன்பினை நடப் பார்

குறிஞ்சித் திணை

[தோழி, தலைவிக்குக் கூறியது]

அன்பை அறிந்தேன், உண்மை உணர்ந்தேன்,
ஆகையினால் தான் என்வாய் திறந்தேன்.
ஒன்றுகேள், நன்றுகேள் அம்மலை நாடன்.
ஒப்பிலா விருப்பினால் வருந்திய ஆளன்.
என் வாய்ச் சொல்லினை நம்பினால் நம்பு,
நம்பாவிட்டால் எனக்கேன் இந்த வம்பு?
நீயே எண்ணிப்பார் புரிந்திடும் உண்மை.
ஆயரோ டாய்ந்துபார் தெரிந்திடும் நன்மை.

அறிவால் ஆராய்ந்து அறிந்த பிறகே
அளாவுதல் வேண்டும் அன்புதான் உறவே.
பெரியோர் நட்பினை ஆய்ந்து கொள்வார்கள்,
நட்டு கொண்டபின் ஆய மாட்டார்கள்!
அன்புடையார்க்கவர் அன்பராய் நடப்பார்,
ஆதலால் தலைவி, அன்பினை நடப்பார்!

## நாகரிகம்

குறிஞ்சித் திணை

[தோழி மொழி]

நண்பர் தரும் நஞ்சினையும்
நல்லமுதாய் வேட்டுண்பர்
நாகரிகம் மிக்குடையார் உலகில்—அந்த
நாகரிகம் நீயுடையாய் தலைவா!

பெண்கனியாள் என்றன் தோழி
பின்னிப்பிணைந் துளக்கின்பம்
பேருளத்துப் பசிதீர்க்கவில்லை—அதைப்
பெரும்பிழை என எண்ணில் தொல்லை.

பண்பாட்டெல்லை மீறலாமா?
பழகிவிட்டு மாறலாமா?
கண்ணோட்டம் கொண்டவளை மணப்பாய்—அவள்
கண்ணும் உயிரும் நீயல்லவோ அணைப்பாய்!

## கூந்தல் மணம்

குறிஞ்சித் திணை

[துறை - நலம் பாராட்டல்]

மலர்தொறும் மது உண்ணும்
மணி ஒளித் தேன்வண்டே
நலந்தரு மொழி ஒன்று செப்பிட வேண்டும்—நீ
நடுநிலை தவறாமல் ஒப்பிட வேண்டும்!

பயில் தொறும் பயில் தொறும்
காதன்மை பாங்குயர்ந்த
மயிலியல் சாயலினாள் முல்லை நகையாள்—முத்தை
மாணிக்கத்தில் வைத்துயிரைக் கொல்லும் நகையாள்!

அறிவால் ஆராய்ந்து அறிந்த பிறகே
அளாவுதல் வேண்டும் அன்புதான் உறவே.
பெரியோர் நட்பினை ஆய்ந்து கொள்வார்கள்,
நட்டு கொண்டபின் ஆய மாட்டார்கள்!
அன்புடையார்க்கவர் அன்பராய் நடப்பார்,
ஆதலால் தலைவி, அன்பினை நடப்பார்!

## நாகரிகம்

குறிஞ்சித் திணை

[தோழி மொழி]

நண்பர் தரும் நஞ்சினையும்
நல்லமுதாய் வேட்டுண்பர்
நாகரிகம் மிக்குடையார் உலகில்— அந்த
நாகரிகம் நீயுடையாய் தலைவா!

பெண்கனியாள் என்றன் தோழி
பின்னிப்பிணைந் துனக்கின்பம்
பேருளத்துப் பசிதீர்க்கவில்லை—அதைப்
பெரும்பிழை என எண்ணில் தொல்லை.

பண்பாட்டெல்லை மீறலாமா?
பழகிவிட்டு மாறலாமா?
கண்ணோட்டம் கொண்டவனை மணப்பாய்— அவன்
கண்ணும் உயிரும் நீயல்லவோ அணைப்பாய்!

## கூந்தல் மணம்

குறிஞ்சித் திணை

[துறை - நலம் பாராட்டல்]

மலர்தொறும் மது உண்ணும்
மணி ஒளித் தேன்வண்டே
நலந்தரு மொழி ஒன்று
நடுநிலை தவறாமல்
செப்பிட வேண்டும்—நீ
ஒப்பிட வேண்டும்!

பயில் தொறும் பயில் தொறும்
காதன்மை பாங்குயர்ந்த
மயிலியல் சாயலினாள்
மாணிக்கத்தில் வைத்துயிரைக்
முல்லை நகையாள்—முத்தை
கொல்லும் நகையாள்!

அலையலையாய் நெளிந்து
கார் முகிலை அடிமை கொண்டு
மலைப்பூட்டும் மயக்கூட்டும் கூந்தல் மணம்போல்—வேறு
மலர்களில் கண்டதுண்டோ கூந்தல் மணமே?

தேனூற்று மலர்களில்
திகட்டாமல் உண்டிடும் நீ
வானூற்றாய் மணக்கின்ற கூந்தல் துறப்பாய்—அட
வற்றாதெனக் கின்பம்தரும் கூந்தல் மறப்பாய்!

## பாலாட்டுப் படுக்கை

மருதத் திணை

[தோழி கூற்று]

ஊடலைத் தீர்த்திட வேண்டிவந்த
ஒண்டமிழ் வாணனே, கேட்டிடுவாய்!
ஆடவர்க் கேற்ற அறிவுடனே, என்
அருமைத் தலைவியின் தோள் மணந்தோன்

ஏடவிழ் வெண்ணிறத் தாமரைபோல், நிலா
எட்டி முகம் பார்க்கும் மாலையிலே,
கூடத்திலே தூய மலர்ப்படுக்கை கொண்ட
குள்ள வடிவுடை கட்டிலிலே,

ஏறிப் படுத்தனன், யானையைப்போல்
இட்ட பெருமூச்சு விட்டபடி,
மீறிய அன்புடன் பிள்ளையினைத் தன்
மேனிதழுவிப் படுத்திருந்தான்.

ஏறினள் பிள்ளையின் தாயவளும்—தன்
இச்சைக் குகந்த தலைவனையே
ஆறிய பாலினில் ஆடையைப்போல்—அவன்
அன்பு முதுகினைத் தழுவிக்கொண்டாள்.

## என்றும் கைவிடாதே

பாலைத் திணை

[உடன் போக்கில் தோழி தலைவற்கு]

பெற்றோர் அறிந்திலர் உற்றார் தெரிந்திலர்
கற்றவனே இவளைக் கொண்டாய்,
கருங்குயில் வரச்சொல்லி விண்டாய்!

குற்றம் ஈதானாலும் நற்றவக் காதற்கு
நான்தடை ஆவதும் உண்டா?
நாளைநீர் வாழ்பவர் அன்றோ!

இன்றுபோல் என்றும்நீர் அன்பினில் தென்பினில்
நன்று குறள்போல் வாழ்க!
நற்றிணைப் பாடல்போல் வாழ்க!

ஓங்கிய மார்பெழில் ஒளியுமிழ் திருமேனி
பாங்கு தளரினும் கைவிடாய்,
பசையற்றுப் போகுமோ மெய்விடாய்?

கூந்தல் நரைத்தாலும் கொண்டநின் காதற்சொல்
ஏந்திய பெண்ணினைத் தள்ளுவையோ?
இன்றுபோல் என்றும்நீ கொள்வையே!

## தாயுள்ளம்

பாலைத் திணை
[செவிலித்தாய் மொழி]

காதலனோடு சென்றாள் விரும்பி-அவள்
களவு மணத்திருந்தாள் அரும்பி,
கணவனோடு வருவாள் திரும்பி! (காதலனோடு)

மோதும் உழவர்கொட்டும் பறையொலி
முழக்கத்திற்கு ஆடிடும் பச்சைமயில்!
வாழும் உயர்மலை ஓங்கும் முகில்
வழியெல்லாம் பெய்யட்டும் குளிர்ந்த மழை!(காதலனோடு)

அறநெறி இதுவென அவனுடன் சென்றாள்
அன்பினை அன்பு மனத்தினால் வென்றாள்!
பிறைநுதல் சிறுமி சென்ற பாலைவனம்
பேரின்பம் ஆக்கட்டும் மழையின் வளம்! (காதலனோடு)

## என்னைப்போல் அவளும் அழட்டும்!

பாலைத் திணை

[மகளைப் பிரிந்த தாயின் மொழி]

மகளைப் பிரிந்தஎன் கண்ணீர் போல்
மகனைப் பிரிந்தாளும் சிந்துக கண்ணீர்! (மகளைப்)

புலியிடம் தப்பிய பெண்மான்-ஆண்
மான்குரல் புகலிடம் சேரும்,

நலிசெயும் வெப்பக் காடு-மகள்
நம்பிப்பின் சென்றாள் அன்போடு! (மகளைப்)

புதுவலி பொருந்திய வில்லைப்
பொருந்திய தோள்தழுவும் கொடிமுல்லை!
பெதும்பையைப் பிரிந்தஎன் தொல்லை-அவன்
பெற்றோரும் எய்துக எல்லை! (மகளைப்)

## அன்றில் நினைவு

பாலைத் திணை

[தலைவன் நினைவு மொழி]

பிரிந்த போது தெரிந்தது தொலைவு
திரும்பும் போது தெரிந்திலேன் தொலைவு!
பிரிந்த காதல் வழியினைப் பெருக்கும்
பின் உனை நினைத்தால், வழியது சுருங்கும்.
(பிரிந்த போது)

சிறந்த பொருளைத் தேடிட எண்ணி,
சேயிழை உன்விழிகளில் தேக்கினோன் கண்ணீர்,
பறந்தேன் பறந்தேன் பாலை நிலத்தை,
படுதொலை வதனால் இழந்தேன் நலத்தை,
(பிரிந்தபோது)

அழகிய நகையினாய் நினைத்தேன் உன்னை
அல்லல் படுத்திய நெடுவழி என்னை,
உழக்கெல்லைத் தொலைவாய் ஆக்கிற்றுப் பின்னை,
உள்ளன்பு அணில்நாம் வழியோ தென்னை!
(பிரிந்தபோது)

## கடமைகள்

வாகைத் திணை

[துறை-மூதின் முல்லை]

எனக்குக் கடமை மைந்தனைப் பெறலே—தந்தை
தனக்குக் கடமை கல்வியைத் தரலே! (எனக்குக் கடமை)

அறிவில் வளர்ந்தும் ஆண்மையில் சிறந்தும்
நெறிப்படும் மகனுக்கு நீள்வேல் தருதல் கொல்லனின்
கடமை! (எனக்குக் கடமை)

உழைப்பால் உலகோம்பும் உண்மையை உணர்த்தும்
தழைப்புறும் நன்னிலம் தந்தோம்புதல்தான் மன்னனின்
கடமை! (எனக்குக் கடமை)

தாய்நிலம் தனில் பகை தறுதலை நீட்டில்
ஓய்வின்றி வாள்வீசி போர்எல்லைக் கோட்டில்
சாய்து பல் யானைகளைச் சமர்க்கள ஏட்டில்
மாயாப் புகழ் எழுதல் என்மகன் கடமை!
(எனக்குக் கடமை)

## அவள் நெஞ்சில் இடி விழட்டும்

வாகைத் திணை

[துறை-மூதின் முல்லை]

இடிவிழட்டும் இவள் நெஞ்சில்—மறக்
குடி மகள் என்பதற்குக்
கடிய மனம் கொண்டாள்! (இடி விழட்டும்)

நேற்று முன்னாள் நடந்த
நிறையானைப் போரில்
கூற்றுவனுக் கிரையிட்டான்—தந்தை
கொடுத்தீந்தான் புகழ்க்குயிர் நேரில்! (இடி விழட்டும்)

நேற்றுநடந்த பெரும்போர்
நிரையினை மீட்கையில்—கணவன்
மாற்றாரை மாள்வித்து
மாண்டனன் வாட்கையில். (இடி விழட்டும்)

இன்றும் போர் முழக்கம்
இன்புறக் கேட்டாள்—அடடே
நன்றென்று மயங்கி
அன்பு மகனை அனுப்பிட வேட்டாள்! (இடி விழட்டும்)

ஆடிடும் பிள்ளைக்கே
ஆடையை உடுத்திக்—கலைந்து
கோடிய தலை மயிர்க்
குற்றநெய் பூசி
ஒருமகன் அன்றி வேறு
ஒரு மகன் இல்லாள்—பகைவர்
செருமுகம் செல்கெனச்
செல்வேல் தந்தாள்! (இடி விழட்டும்)

## இனி என்ன வேண்டும்

வாகைத் திணை

வாகை நமக்குத்
தாழ்வெலாம் அவர்க்கே!

வட்டஆழித் தேர்கள் அழிந்தன,
மாளாப் பகைப்படை மாண்டு தொலைந்தது.
மட்டிலாப்புகழ் பட்டத்து மன்னன்.
மாய்ந்தான், என்வாள் தோய்ந்தது மார்பில்!

ஆனைகள் எல்லாம் பூனைகள் ஆயின,
அம்பும் வில்லும் கம்பந் தட்டுகள்,
நானிலம் குழியப் பறக்கும் குதிரைகள்
நத்தைகள் ஆயின! நத்தைகள் ஆயின!

வெள்ளை மாலை வீரக் கருங்கழல்,
சிவப்புக் கச்சை வேண்டி அணிந்தீர்.
தெள்ளு மாத்தமிழ் மறவரே கண்டீர்
தீர்ந்தது வேலை இனிஎன்ன வேண்டும்?

## ம. சிங்காரவேலர்

சிங்கார வேலனைப்போல் சிந்தனைச் சிற்பி
எங்கேனும் கண்டதுண்டோ?
சிங்கார வேலனைப்போல்!

பொங்கிய சீர்திருத்தம் பொலிந்ததும் அவனால்
பொய்புரட் டறியாமை பொசிந்ததும் அவனால்
சங்கம் தொழிலாளர்க் கமைந்ததும் அவனால்
தமிழர்க்குப் புத்தெண்ணம் புகுந்ததும் அவனால்!

செங்கதிர் ஒளிபோல் அறிவில் தெளிந்தவன்
திங்களின் ஒளிபோல் அன்பில் குளித்தவன்!
(சிங்கார வேலனைப் போல்)

நாடு விடுதலை பெற்றதும் அவனால்
நாத்திகக் கருத்தனல் கனன்றதும் அவனால்
பாடுபடுவார்க் குரிமை உயிர்த்ததும் அவனால்
பழமையில் புதுமை மலர்ந்ததும் அவனால்!
ஓடும் அருவியைப்போல் உண்மையில் தெளிந்தவன்
உறுதியில் எஃகினுக்கும் ஊட்டம் அளித்தவன்!
(சிங்கார வேலனைப்போல்

மூல தனத்தின்பொருள் புரிந்ததும் அவனால்
புதுவுலகக்கனா முளைத்ததும் அவனால்
கோலப் பொதுவுடைமை கிளைத்ததும் அவனால்
கூடின அறிவியல், அரசியல் அவனால்!
கடல்வான் ஆழ் அகலக் கல்வியைக் கற்றவன்
கண்ணாய் உயிராய்த் தமிழர்க் குற்றவன்!
(சிங்கார வேலனைப் போல்)

தோழமை உணர்வு தோன்றிய தவனால்
தூய தன்மானம் தொடர்ந்ததும் அவனால்
ஏழமை இலாக் கொள்கை எழுந்ததும் அவனால்
எல்லோர்க்கும் எல்லாம் என்றுணர்ந்ததும் அவனால்!
போர்க்குணம் மிகுந்தநல் செயல் முன்னோடி
பொதுவுடைமைக் கேகுக அவன் பின்னாடி!
(சிங்கார வேலனைப் போல்)

## நானடா

இல்லை என்பேன் நானடா!—அத்
தில்லை கண்டுதானடா!
பல்லோர் பணம் பறித்துப்
பாடுபடாதார்க் களிக்கும்
கல்லில் செம்பில் தீட்சிதர்கள்
சொல்லில் செயலில் உண்மைப் பொருள்
(இல்லை என்பேன்)

இல்லை உரு அப் பொருளுக்
கென்பதை மறப்பதோடா?
கல்லைச் செம்பைக் காட்டுதற்குப்
கட்டணம் பறிப்பதோடா? (இல்லை என்பேன்)

பல்லைக் காட்டும் ஏழைமுகம்
பார்க்கவும் வெறுப்பதோடா!
பால்பருகத் தீட்சிதர் ஊர்த்
தாலியை அறுப்பதோடா? (இல்லை என்பேன்)

காட்டும்சிலை கடவுள்எனில்
காசுவாங்கச் சொல்லுமோடா?
கையுழைப் பிலாதவரின்
பொய்நடத்தை செல்லுமோடா?
தேட்டைக்காரர் சொற்கள் பண
மூட்டை தன்னை வெல்லுமோடா?
தீட்சிதராம் தேவர்களை
வாந்திபேதி கொல்லுமோடா? (இல்லை என்பேன்)

தொத்துநோய் அகற்றும் வன்மை
அச் சிலைக் கிருந்ததோடா?

தோள்எடுத்த அரசினரின்
சொல்லுக்கஞ்சி வாழுமோடா?
பத்துநாள் விழா நிறுத்தச்
செப்பினால் பொறுக்குமோடா?
பட்டம்பகல் கொள்ளைக்கென்றே
திட்டம் செய்த சிலையிலே உயிர் (இல்லை என்பேன்)

தட்டான் மணிக்கோவையும் ஓர்
காத்தானி பூமாலைகளும்
சிட்டா நாதசுரங்களும் ஓர்
சேணியன் பட்டுடை அழகும்
கட்டான் தோள் கன்னான் அன்று
காய்ச்சி வார்த்த திறமையதும்
எட்டாப் பொருள் என்றுரைக்கும்
முட்டாள்தனம் தன்னில் உண்மை (இல்லை என்பேன்)

## இரண்டும் ஒன்றா?

செக்குப் பாட்டும் சிட்டுப் பாட்டும் ஒன்றா?—வட
சேரிப் பாட்டும் தெற்குப் பாட்டும் ஒன்றா?
கொக்குப் பாட்டும் குயிலின் பாட்டும் ஒன்றா—வட
கோணைப் பாட்டும் குழற்பாட்டும் ஒன்றா?
விக்குப் பாட்டும் வீரப்பாட்டும் ஒன்றா—வட
வெட்டிப் பாட்டும் தொட்டிற்பாட்டும் ஒன்றா?
மக்குப் பாட்டும் தமிழன் பாட்டு ஒன்றா?—வட
மடையன் பாட்டை நாம் பாடுதல் நன்றா?
பிணவறையும் மணவறையும் ஒன்றா?—வட
பேயகமும் தாயகமும் ஒன்றா?
தணல் மொழியும் அணிதமிழும் ஒன்றா?—வட
தாழ்மறையும் தமிழ்மறையும் ஒன்றா?
நுணற்பாட்டும் தமிழ்ப்பண்ணும் ஒன்றா?—வட
நூற்கருத்தும் தமிழ்க் கருத்தும் ஒன்றா?
தணி புனலும் செந்தணலும் ஒன்றா?—வட
சழக்கினை நாம் அழைப்பதுவும் நன்றா?
கல்லைத் தொழல் கடவுள் தொழல் ஒன்றா?—வட
கழிநெறியும் தமிழ்நெறியும் ஒன்றா?
புல்லணிதல் போர் அணிதல் ஒன்றா?—வட
புலைதொழிலும் கலைத்தொழிலும் ஒன்றா?
கொல்லும் தொழிலும்காப்புத்தொழிலும் ஒன்றா?—வட
கொலைவேள்வியும் தமிழ்வேள்வியும் ஒன்றா?
சொல்லிற் பொய்யும் நல்வாய்மையும் ஒன்றா?—வட
தூக்கில் தொங்க நாம்விரும்பல் நன்றா?

## தீர்த்துக்கட்டு

வறுமையில் செம்மை வாய்ப்பேச்சு
வல்லவர் சுரண்டிடும் பிழைபேச்சு!

பெருமையைப் பிடுங்கிடும் வறுமை,
பெரும்பேர் ஆற்றலைக் கெடுத்திடும் சிறுமை!
அருமை அருமை அதனுடன் வாழ்தல்,
'ஆண்டவன்' 'விதி' எல்லாம் தாழ்தல்!

தீமைக் கெல்லாம் தீமை வறுமை,
தீர்த்துக் கட்டுவதே மக்கள் பெருமை;
ஆமை எனவாழ்தல் வீணான குறுமை
ஆக்குக தேக்குக பொருள் பொதுவுடைமை!

உடையவன் இல்லான் என்பதை நீக்கி
உழைப்பினை அனைவர்க்கும் பொதுமை யாக்கி
உழைப்புக் கேற்ற ஊதியம் தேக்கி
உலகம் நடத்துக ஓரர சாக்கி.

(வறுமையில் செம்மை)

## கட்டாயக் கல்வி

கண்திறக் காதபோது விடுதலை வாழ்வின்
கதவு திறந்தால் பயன் ஏது?
எண்ணும் எழுத்துமிரு கண்எனத் தெரிந்தும்
இன்தமிழ்க் கட்டாயக் கல்வியால் மக்களின்

(கண் திறக்காதபோது...)

மண்ணுளார்க் கெல்லாம் அழியாத செல்வம்
மன்னிய கல்வியே ஆகும்—நாம்
வண்டமிழ் நாட்டில் கட்டாயக் கல்வி
இல்லையேல் உள்ளதும் போகும்.
புண்ணே கல்லார் கண்எனத் தெரிந்தும்
புகல்தமிழ்க் கட்டாயக் கல்வியால் மக்களின்

(கண் திறக்காதபோது...)

மதம்எனும் முள்ளுப்புதர் அடர்ந்திருக்கும்
வழிக்கெல்லாம் கல்வியே விளக்கம்—இங்கு
மண்டிடும் சாதிச் சண்டைக்குக் காரணம்
மனஇருளால் வரும் சுளுக்காம்.
எதற்கும் கல்வியே வேர்எனத் தெரிந்தும்
இன்தமிழ்க் கட்டாயக் கல்வியால் மக்களின்

(கண் திறக்காதபோது...)

## மக்கள் உணர்வு பெறவேண்டும்

கலகத்துக்கெல்லாம் படிப்பாளிகள் காரணம்

முதலாளி எவ்வாறு முளைத்து வந்தான் அண்ணே?
முதலாளியைப் படிப்பாளி முளைக்க வைத்தான் தம்பி
மதியாளி படிப்பாளி இரண்டும் ஒன்றா அண்ணே?
மதியாளி பிறர் நலத்தை மதிப்பவனாம் தம்பி
எதனாலே படிப்பாளி இகழ்ச்சியுற்றான் அண்ணே?
இழிந்தனை உயர்ந்ததென்றும் இயம்பிடுவான் தம்பி
பதைபதைக்கும் கலகமெலாம் யாராலே அண்ணே?
படிப்பாளி யால்வந்த பாழும்நிலை தம்பி.

படிப்பாளர் என்பவர் யார் பகரவேண்டும் அண்ணே?
படியாளும் அரசனொரு படிப்பாளி தம்பி
உடனிருக்கும் அமைச்சனொரு படிப்பாளி தம்பி,
ஊர்ச் சட்டம் அமைப்பவனும் படிப்பாளி தம்பி,
கடிதாகக் கருத்துரைப்போன் படிப்பாளி தம்பி,
கைச்சரக்கே அறம்என்பான் படிப்பாளி தம்பி.
படிப்பாளி படுத்தியுள்ள பாடென்ன அண்ணே?
பாரிலுள்ள துன்பமெல்லாம் சட்டம் என்றான் தம்பி.

மக்கள் சமம் என்பதற்குச் சட்டமுண்டோ அண்ணே?
மதமிருக்க வேண்டுமென்ற சட்டமுண்டு தம்பி
தக்கபடி வாழ்ந்திருக்கச் சட்டமுண்டோ அண்ணே?
சண்டையிடும் சாதிவெறிச் சட்டமுண்டோ தம்பி
ஒக்க எலாம் வாழ்வதற்குச் சட்டமுண்டோ அண்ணே?
ஓரினமே வாழ்வதற்குச் சட்டமுண்டு தம்பி.
திக்கற்றார் காப்புக்குச் சட்டமுண்டோ அண்ணே?
தீதுற்றார் சாவுக்கே சட்டமுண்டு தம்பி.

தன் நாட்டை அயல் நாட்டின் தாய் என்றா சொன்னான்?
தன் நாடே பிறநாடாம்? சட்டமிதே என்றான்.
தன் மொழியை அயல் மொழியின் தாய் என்றா சொன்னான்?
தன் மொழியை உலக மொழி; சட்டமிதே என்றான்
தன் இனத்தைப் பிறர்பொருளால் காப்பதவன் கருத்தா?
தன் நலத்துக் காகப்பிறர் சாகவேண்டும் என்றான்.
இன்னலெல்லாம் படிப்பாளி ஏற்பாடா அண்ணே!
ஏழைகளை ஏய்ப்பவனே படிப்பாளி தம்பி.

படிப்பாளிக் கெதிர்ப்பாளி இருப்பதுண்டோ அண்ணே?
படிப்பாளி எதிர்ப்பாளி கொள்கைஒன்றே தம்பி
படிப்பாளி உழைப்பாளிக் கெதிரி அன்றோ அண்ணே?
படிப்பாளிக் கெதிர்ப்பாளி அப்பன்தான் தம்பி.
அடிப்பாளி படிப்பாளி கட்சியுண்டோ அண்ணே?
அவற்றோடும் ஆச்சாரி கட்சி ஒன்று தம்பி.

படிப்பாளி கொட்டமெலாம் பறப்பதுண்டோ அண்ணே?
பறக்கடிக்க மக்களெலாம் உணர்ச்சிபெற வேண்டும்.

## தாலாட்டு

ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரரிரோ
ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரரிரோ

வாரும் இன்பத் திராவிடனே என் கரும்பே!
ஆரா அமுதே வெற்றித் திராவிடரின்

ஆரியர்கள் இங்கே அடிவைக்கு முன்னமே
வேரிட்டு வாழ்ந்த வெற்றித் திராவிடரின்

பேரர்க்குப் பேரனே பிள்ளையாய் நீ கண்ணுறங்கு!
சேர அரிதான் செல்வமே கண்ணுறங்கு!

வெண்டா மரையில் விளையாடும் வண்டுபோல்
கண்தான் பெயரநீ என்ன கருதுகின்றாய்?

பண்டைத் திராவிடத்தின் பண்பு குலைக்க இனி
அண்டைப் பகைவர் நினைப்பரெனும் ஐயமோ?

தொண்டு விரும்போம் துடை நடுங்கோம் எந்நாளும்
சண்டையிட்டுத் தோற்றதில்லை தக்க திராவிடர்கள்

எண்டிசையும் நன்றறியும் அன்றோ? இனிக்குங்கற்
கண்டே, கனியே, எங்கண்மணியே கண்வளராய்.

தங்கம் உருக்கித் தகடிட்டுப் பன்மணிகள்
எங்கும் அழுத்தி இயற்றியதோர் தொட்டிலிலே

திங்கள் திகழ்ந்ததெனும் வெண்பட்டு மெத்தையின்மே
மங்கா உடல் மலரும் வாய் மலரும் கண்மலரும்,

செங்கை மலரும், சிரிப்பின் எழில் மலரும்,
தங்கா தசைந்தாடும் தண்டை இரு கால்மலரும்!

அங்கங் கழகு செயும் ஆணழகே கண் வளராய்
எங்கள் மரபின் எழில் விளக்கே கண் வளராய்.

## பெண் பெற்றப் பயனைப் பெற்றேன்

அன்னையின் மகிழ்ச்சி

இன்றுதான் உனைப் பெற்றபயன் பெற்றேன்
நன்று கற்றவள் உன் மகள் எனக்கேட்ட

(இன்றுதான்...)

குன்றாப் பெருமை உடைய நிறைமொழி
ஒன்றே என்றால் அதுஎன் தமிழ்மொழி
என்றே பற்பல சான்றுகள் காட்டி
மன்று மகிழவைத் தாயாம்என் கண்ணாட்டி
(இன்றுதான்...)

தமிழ்மொழி வாழ்ந்தால் தமிழர் வாழ்வார்
தமிழ்மொழி வீழ்ந்தால் தமிழர் வீழ்வார்
இமைப்பில் செயத்தக்க செய்கென்று சொல்லி
அமிழ்தைப் பொழிந்தா யாமே என் செல்வி,
(இன்றுதான்...)

ஆளப் பிறந்தவர் தமிழர்என் றாயாம்
ஆண்ட வரலாற்றை நீபுகன் றாயாம்
தோளில் தமிழர்க்கும் பலவீரம் திரும்பத்
துளிர்க்கச் செய்தாயாம் என்கட்டிக் கரும்பே.
(இன்றுதால்...)

வீரம் உடையது செந்தமிழ் நாடு
மேன்மை யுடையது தமிழர்பண் பாடு
நேர்மையோ டிவற்றை விளக்கினை என்றே
நிகழ்த்தக் கேட்டேன் என்குணக் குன்றே.
(இன்றுதான்...)

## பசுத்தோல் போர்த்த புலி

கடின உழைப்புத் தொழிலாளி
கடைவிரித்தான் முதலாளி.

மடையன் என்று உனைநினைப்பான்
நிற்காதே—உன்
மாண்புழைப்பை அவனிடத்தில்
விற்காதே!

ஒன்றிரண்டு உதவி செய்வான்
உடலுழைப்பை உறிஞ்சிடுவான்
கொன்றழித்துத் தான்கொழுப்பான்
போகாதே—பொருள்
கொலைகாரத் தொழிற்சூளையில்
வேகாதே!

எண்ணங்கெட்ட பொருளாளி
இழிவுக்கெல்லாம் முதலாளி
தொண்டுறிஞ்சும் புல்லுருவி
வெம்பாதே!—பசுத்
தோலைப்போர்ந்த புலியவனே
நம்பாதே!

## பொய்க்குச் சிறகுண்டு

பொய்க்குக் காலில்லை சிறகுகள் உண்டு—நான்
புகன்றேன் பொறாமைப் புலவனைக் கண்டு!
பொய்க்குக் காலில்லை சிறகுகள் உண்டு!

ஐயோ இவனும் ஓர் தமிழுக்கு மகனாம்
அயோத்தி இராமனுக்குக் கிடைத்த வீடணனாம்!
பொய்க்குக் கிடைத்ததாம் உட்காரும் இருக்கை
பொய்அவிழ்ப் பான் இனி பொறாமைச் சரக்கை!
பொய்க்குக் காலில்லை சிறகுகள் உண்டு!

உண்மை வெளியாகும் நாள் ஒன்றும் உண்டு
உயிரோ டிருக்குமா பொய் எனும் மண்டு?
கண்கெட்டு போகுமுன் களவாளி நண்டு!
காலைக் கடித்திடும் ஆக்குக துண்டு!
பொய்க்குக் காலில்லை சிறகுகள் உண்டு!

நாய்தன் வாயிலே தந்தம் உண்டாம்
நம்பினானே அதற்கொரு முண்டம்!
நோய்சேய் புலவர் தமிழுக்குத் தண்டம்
நூறுபொய் நூறுபொய் தாங்குமா அண்டம்!

## தமிழரிடம் எல்லாம் உண்டு

கேள்வி : தென் கடலில் முத்திருக்கும்
தென்னாட்டில் தமிழிருக்கும்
என்கின்றார் மெய்தானா தமிழரே?—அங்
கின்னம் ஏ தேனுமுண்டா தமிழரே?

விடை : தென் கடலில் முத்திருக்கும்
தென்குமரி ஆழ்த்திருக்கும்
தென்னாட்டில் எல்லாமுண்டு தோழரே—அதைத்
தெரிந்து கொள்ள ஆசைவேண்டும் தோழரே.

கேள்வி : முன்னாளின் இலக்கியங்கள்
இந்நாளின் இலக்கியங்கள்
தென்னாட்டில் உள்ளனவோ தமிழரே?—நீர்
செவ்வையாய் விளக்க வேண்டும் தமிழரே?

விடை : பொன்சேர்தொல் காப்பியமும்
புறப்பொருளும் அகப்பொருளும்
தன்னேரிலாக் குறளும்—தோழரே—இவை
சார்ந்தபல் லாயிரமாம்—தோழரே.

கேள்வி : முன்னாளில் இலக்கியங்கள்
மொழிந்தீர்கள் இவை என்றே
இந்நாளின் இலக்கியங்கள்—தமிழரே—நீர்
ஏதொன்றும் கூறவில்லை தமிழரே?

விடை : இந்நாளில் தோன்றியவை
எண்ணிறந்த இலக்கியங்கள்
இன்னும் அவ் விளைவின் ஓட்டம்—தோழரே—உய்
கொளகையினில் ஆசை வைத்தேன் தோழரே.

விடை : ஒன்றாகும் மக்கள் நிலை
உணர்வொன்றே பெறத்தக்கதாம்
அன்றே உரைத்த இவை—தோழரே—இதை
ஆரும் உரையாத போது தோழரே.

கேள்வி : நன்றான அக்கருத்தை
நாட்டுகின்ற இலக்கியங்கள்
ஒன்றேனும் தனித் தமிழில்—தமிழரே—இங்
குள்ளதுவோ சொல்லிடுவீர்—தமிழரே?

விடை ; இன்றுநீர் தனித்தமிழ் ஒன்
றிருப்பதாக ஒப்புகின்றீர்,
குன்றிலொரு குரங்கு வந்தால்—தோழரே—அக்
குரங்குகளே குன்றாகுமோ—தோழரே?

கேள்வி : வீட்டினிலே உள்ள பொருள்
வேறுபட்டால் அந்தப் பொருள்
வேறுபொருள் என்னாரே தமிழரே—அவ்
வேறுபொருள் உம்பொருளோ தமிழரே.

விடை : வீட்டிலே இருந்த பொருள்
வேறுபட்டால் வீட்டுரிமை
வேறாகிப் போய்விடுமோ தோழரே—எம்
வீட்டுப்பொருள் தேடேமோ தோழரே?

கேள்வி :

கூட்டக் கடல் நீரின் உள்ளே
குமரிநாடு மூழ்கிற் றென்றீர்
நாட்டுக்கிதில் பெருமை என்ன தமிழரே—இதை
நன்றாக விளக்க வேண்டும் தமிழரே?

விடை :

பாட்டை அறியா உலகில்
பழங்குமரி அறிவு வைத்தாள்
மூட்டையுடன் இங்குவந்தோர்—தோழரே—கடல்
முத்தைச் சொல்லி அதைமறைப்பார் தோழரே.

கேள்வி:

நாட்டை ஒட்டிக் குமரிநாடும்
இருந்ததென்றால் தமிழருக்குக்
கட்ட இதில் பெருமை உண்டோ தமிழரே?—நான்
காண இதை விளக்க வேண்டும் தமிழரே?

விடை:

காட்டை ஒத்த உலகில் ஒளி
காட்டிவைத்த குமரி நாட்டைக்
காட்டினால் எம்பெருமை தோழரே—மிகக்
காணுவார் எம் பகைவர் தோழரே.

## தமிழர்க்கொரு திருநாள்

தமிழர்க் கொரு திருநாள்—அது
தைத்திங்கள் முதல் நாள்
சமயத்துறை அறவே—உயர்
தமிழ் வாழ்த்தும் பெருநாள்.

நமை ஒப்பார் யாவர்? நம்
தமிழ் ஒப்பதும் யாது?
கமழ் பொங்கல் நன்னாள்—புதுக்
கதிர் கண்ட பொன்னாள்!

ஏரோட்டும் இரு தோள்—ஒரு
சீர் போற்றும் திருநாள்!
ஆரோடும் உண்ணும் நெல்
அறுவடை செய் பெருநாள்!

போராடும் கூர் வாள்—பகை
போக்குவ தோர் பெருநாள்!
ஊரோடும் உறவோடும்
உள மகிழும் திருநாள்.

மாடுகளும் கன்றுகளும்
வாழியவே என்று
பாடுகின்ற நன்னாள்! கொண்
டாடுகின்ற பொன்னாள்!
வீடுதெரு வெங்கும் எழிற்
சோடனை விளங்கும்
நீடுதமிழ் நாடு—புகழ்
நீட்டுகின்ற திருநாள்!

□ □ □